வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2017

## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | கணக்கீடு – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

(1) பின்வரும் கூற்றுக்களில் முற்பண முறைச் சில்லறைக் காசு தொடர்பான சரியான கூற்றைக் குறிப்பிடுக?
 (1) ஒவ்வொரு மீள் நிரம்பல் கால இறுதியிலும் ஒரே அளவிலான காசுப் பெறுமதி மீள் நிரப்பல் செய்தல் வேண்டும்
 (2) ஒவ்வொரு மீள்நிரப்பல் கால இறுதியிலும் சில்லறைக் காசாளரிடம் மீதமுள்ள காசுப் பெறுமதிக்குச் சமனான தொகையினை மீள் நிரப்பல் செய்தல் வேண்டும்.
 (3) சில்லறைக் காசேட்டு முற்பண முறையினை உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்றாகக் கருத முடியாது
 (4) மீள்நிரப்பல் கால இறுதியில் சில்லறைக் காசாளரிடம் எஞ்சியிருக்கும் பணத்தொகையும், அக்காலத்தினுள் செலவிடப்பட்ட தொகையினதும் மொத்தம் வசக்கட்டுத் தொகைக்குச் சமனாக இருக்கும்
 (5) சில்லறைக் காசு கொடுப்பனவு தொடர்பான மூல ஆவணமொன்றாக பற்றுச்சீட்டு பயன்படுத்தப்படும் (..................)

(2) ஒரு நிறுவனத்தின் வங்கிக்கூற்று ரூபா 12 500 கொண்ட மேலதிகப் பற்றைக் காட்டியது விநியோகஸ்தர் ஒருவருக்கு கொடுக்கப்பட்ட ரூபா 1500 இற்கான காசோலை இன்னமும் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படவில்லை. வங்கியினால் காசோலைக்கான பணம் கொடுக்கப்பட்ட பின்னர் வங்கிக் கூற்றிலுள்ள நிலுவை
 (1) ரூபா 14 000 வரவு (2) ரூபா 11 000 வரவு (3) ரூபா 12 500 வரவு
 (4) ரூபா 14 000 செலவு (5) ரூபா 11 000 செலவு (..................)

(3) ஒரு நிறுவனம் பரீட்சை மீதி தயாரிப்பது
 (1) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக
 (2) பிழைகள், விடுபடுதல்களை அடையாளம் காண்பதற்காக
 (3) கணக்கு ஏடுகளின் எண்கணித பிழையின்மையை சரிபார்ப்பதற்காக
 (4) அதன் மூலதனத்தை கணக்கிடுவதற்காக
 (5) இலாபநட்டத்தை கணிப்பிடுவதற்காக (..................)

(4) ஒரு கம்பனியானது கடன் அடிப்படையில் 10 கணிணிகளை ஒவ்வொன்றும் ரூபா 80 000 விலையில் 15% வியாபால கழிவில் கொள்வனவு செய்தது. கடன் தொகை அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடன் தீர்க்கப்படுமாயின் 10% காசுக்கழிவு வழங்கப்படும். கம்பனி கடனைக் குறித்த கடன்காலப் பகுதிக்குள் தீர்த்திட விரும்புகின்ற போது எழுதப்பட வேண்டிய காசோலையின் பெறுமதி யாது?

(1) ரூபா 680 000 (2) ரூபா 720 000 (3) ரூபா 612 000
(4) ரூபா 800 000 (5) ரூபா 700 000 (..................)

(5) பின்வரும் தகவல்கள் சந்தோஸ் வியாபாரத்துடன் தொடர்புடையதாகும்

| | 2016. 03. 31 | 20170 03. 31 |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 500 000 | 800 000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 200 000 | 250 000 |

இவ்வருட காலத்தில் உரிமையாளரினால் மேற்கொள்ளப்பட்ட பற்றுக்கள், மேலதிக மூலதனம் முறையே ரூபா 25 000 ரூபா 50 000, 2017.03.31 இல் உள்ளபடியான சொத்துக்களில் ரூபா 100 000 கிரயமான இருப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை. இவை கொள்வனவாக கருதி பதிவு செய்யப்பட்ட போதும் இன்னும் நிறுவனத்தை வந்தடையவில்லை.

2017.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான சந்தோஸ் வியாபாரத்தின் தேறிய இலாபம் அல்லது நட்டம் யாது?

(1) ரூபா 325 000 (2) ரூபா 225 000 (3) ரூபா 375 000
(4) ரூபா 275 000 (5) ரூபா 310 000 (..................)

(6) வணிகமொன்றின் ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 400 000 ஆகும். ஊழியர் சேமலாபநிதிக்கு ஊழியர்கள், தொழில் தருனரின் பங்களிப்பு முறையே ரூபா 40 000 ஆகவும்,ரூபா 60 000 ஆகவும் காணப்பட்டது. சம்பளம் காசாக உரிய மாதத்தில் செலுத்தப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பானது எதிர்வரும் மாத்தில் செலுத்தப்படுகிறது. இக்கொடுக்கல் வாங்களின் விளைவானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் எம் முறையில் காட்டப்படும்.

| | சொத்துக்கள் | = | பொறுப்புக்கள் + | உரிமை |
|---|---|---|---|---|
| (1) | -360 00 | = | + 40 000 | - 400 000 |
| (2) | -360 00 | = | + 60 000 | + 420 000 |
| (3) | -360 00 | = | + 100 000 | - 460 000 |
| (4) | -400 00 | = | + 100 00 | - 500 000 |
| (5) | -460 00 | = | + 40 000 | - 500 000 |

(..................)

(7) நாவலர் சன சமூக நிலையமானது ஒரு கட்டிடம் அமைப்பதற்காக ரூபா 1000 000 விசேட நன்கொடையாக பெற்றுக் கொண்டது. இதில் 800 000 ரூபா கட்டிடம் அமைப்பதற்காக பயன்படுத்தியது மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின் கட்டிட கணக்கு, திரண்ட நிதிக் கணக்கு, மீதிகளில் ஏற்படும் மாற்றமும் விசேட நன்கொடை கணக்கில் மீதியாக உள்ள தொகையும் முறையே

| | கட்டடக் கணக்கு | திரண்ட நிதிக்கணக்கு | கட்டிடநன் கொடை கணக்கு |
|---|---|---|---|
| (1) | 800 000 | 800 000 | 200 000 |
| (2) | 800 000 | 1000 000 | 1000 000 |
| (3) | 800 000 | 1000 000 | 800 000 |
| (4) | 800 000 | 800 000 | 1000 00 |
| (5) | 800 000 | 1000 000 | 200 000 |

(8) 01.04.2013 இல் ரூபா 1000 000 க்கு மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்து அதன் மீது நேர்கோட்டு முறையில் 20% பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டது. 01.04.2016 இல் இம் மோட்டார் வாகனத்தின் ஆயூட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் ஆயுட்காலம் இன்னும் 5 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது. இதன்படி 2016 / 2017 ஆம் ஆண்டுக்கான பெறுமானத்தேயிவு யாது?

(1) ரூபா 200 000 (2) ரூபா 80 000 (3) ரூபா 180 000
(4) ரூபா 100 000 (5) ரூபா 400 000 (..................)

(9) பின்வருவனவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

A - ஒதுக்கங்களை மூலதனமாக்குவதால் உரிமையாண்மையில் மாற்றமேற்படாது
B - நிதிநிலைமைக் கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளும் என்பதில் வங்கி மேலதிகப்பற்றும் உள்ளடக்கப்படும்
C - சமப்பாட்டு புள்ளியில் நிலையான கிரயத்திற்கு சமனாக பங்களிப்பு காணப்படும்

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) A,B ஆகியன மட்டும் (5) A,C ஆகியன மட்டும் (..................)

(10) 2017.03.31 இல் வரையறுக்கப்பட்ட ஜோசப் கம்பனியின் பரீட்சை மீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீதிகளும் மேலதிக தகவல்களும் பின்வருமாறு

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 200 000 |
| காணி | 1000 000 | |

மேலதிக தகவல்
இவ்வருடத்தில் காணியானது ரூபா 750 000க்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.

மேற்படி நிகழ்வின் காரணமாக31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் இலாபத்திலும் மொத்த முற்றுமடங்கிய வருமானத்திலும் ஏற்பட்ட தேறிய முறைவு எவ்வளவு?

| இலாபத்தில் தேறிய குறைவு (ரூபா) | மொத்த முற்று மடங்கிய வருமானத்தில் தேறிய குறைவு (ரூபா) |
|---|---|
| (1) 250 000 | 250 000 |
| (2) 250 000 | 50 000 |
| (3) 50 000 | 250 000 |
| (4) 50 000 | 200 000 |
| (5) 200 000 | 250 000 |

(..................)

(11) சுதனும் மதனும் இலாபநட்டங்களை 2 : 1 எனும் விகிதத்தில் பங்கிடும் பங்காளர்கள் இவர்கள் மதுரா எக்பவரை ஒரு புதிய பங்காளராக இலாகநட்டத்தில் $\frac{1}{5}$ பங்கு பெறும் வகையில் சேர்த்துக் கொண்டனர். இப்பங்குடைமையின் புதிய இலாபநட்ட விகிதம் என்ன?

(1) 2 : 1 : 1 (2) 8 : 4 : 3 (3) 8 : 4 : 1
(4) 2 : 2 : 1 (5) 3 : 2 : 1 (..................)

(12) சம்பளப்பட்டியலில் குறிக்கப்படும் ஊழியரின் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கான தவலை பெற்றுக் கொள்ளக்கூடிய மூலகம் யாது?

(1) கையொப்ப பதிவேடு (2) துண்டுக்கூலி பத்திரம் (3) வேலைப்பத்திரம்
(4) அமுலாக்கச் சட்ட மூலகம் (5) நியமனக் கடிதம் (..................)

The National e-learning Portal for The General Education

(13) பின்வருவனவற்றுள் எவை நிகழத்தக்க பொறுப்புக்களாக வெளிப்படுத்த முடியும்

A - விற்பனையின் போது விற்பனை உத்தரவாதம் வழங்கியமை

B - பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு C - ஐயக்கடனுக்கான ஏற்பாடு

D - ஊழியர்களினால் கோரப்படும் இழப்பீட்டுத் தொகையொன்றுக்கான வழக்கு

(1) A, B ஆகியன மாத்திரம் (2) C, D ஆகியன மாத்திரம் (3) B, C ஆகியன மாத்திரம்

(4) A, D ஆகியன மாத்திரம் (5) A, C, D ஆகியன மாத்திரம் (..................)

(14) 2016.04.01 இல் ரூபா 1500 000 கிரயத்தையும் ரூபா 450 000 திரண்ட பெறுமானத் தேய்வையும் கொண்ட கட்டமொன்று 2017.01.01 இல் ரூபா 1000 000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. கட்டடத்திற்கு நேர்கோட்டு முறையில் 5% பெறுமானத் தேய்விடப்படுகின்றது. 2017.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கட்டடத்தின் பெறுமானத்தேய்வு தொகை யாது?

(1) ரூபா 75 000 (2) ரூபா 50 000 (3) ரூபா 68 750

(4) ரூபா 52 500 (5) ரூபா 57 500 (..................)

(15) பொருள் பெறுவனவுப் பத்திரம் (GRN) பற்றி பின்வருவனவற்றில் எது சரியான கூற்று யாது?

(1) களஞ்சிய சாலையினால் கொள்வனவு செய்யும் பகுதிக்கு அதிகாரம் வழங்குவதற்கான ஆவணம்

(2) களஞ்சிய சாலையினால் கொள்வனவு செய்யும் பகுதிக்கு அதிகாரம் வழங்குவதற்கான ஆவணம்

(3) பண்டங்களை வழங்குமாறு வழங்குனருக்கு உறுதியளிக்கும் ஆவணம்

(4) வழங்குனரிடமிருந்து பெற்ற பண்டங்களுக்கான கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரமளிக்கும் ஆவணம்

(5) உற்பத்தி பகுதியிலிருந்து களஞ்சியசாலைக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுக்கும் ஆவணம் (..................)

(16) பின்வருவன குறிப்பிட்டதொரு உற்பத்திப் பொருளுடன் தொடர்புடைய தகவல்களாகும்.

100 அலகுகள் விற்கும் போதுள்ள மொத்தக்கிரயம் - ரூபா 125 000

150 அலகுகள் விற்கும் போதுள்ள மொத்தக்கிரயம் - ரூபா 175 000

விற்பனைக்கு பங்களிப்பு விகிதம் - 20%

ரூபா 250 000 இலாபத்தினைப் பெறும் பொருட்டு விற்பனை செய்யப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையை கணிக்குக?

(1) 1100 அலகுகள் (2) 25 அலகுகள் (3) 100 அலகுகள்

(4) 1000 அலகுகள் (5) 1175 அலகுகள் (..................)

(17) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் -08 இன் படி இருப்புக்களை முதல் உள் முதல் வெளியில் இருந்து நிறையளித்த சராசரி முறைக்கு மாற்றுதல் எவ்வாறு அழைக்கப்படும்

(1) கணக்கீட்டு வழு (2) ஒரு பிழைக்கான திருத்தம்

(3) கணக்கீட்டு கொள்கையில் எழும் மாற்றம் (4) கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம்

(5) இரும்பு கணிப்பீட்டில் எழும் மாற்றம் (..................)

(18) வியாபாரமொன்றின் 31.03.2017 இல் முடிவடைந்த கணக்காண்டில் செலுத்தப்பட்ட வாடகை ரூபா 200 000 ஆகும். 31.12.2016 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக மாதாந்தம் ரூபா 20 000 ஆகவும் 31.12.2017 முடிவடைந்த வருடம் தொடர்பாக மாதாந்த வாடகை ரூபா 25 000 ஆகவும் இருந்தது.

வருமானக் கூற்றிலும் நிதிநிலைமைக் கூற்றிலும் காட்டத்தக்க வாடகையானது முறையே

(1) ரூபா 240 000, ரூபா 40 000 (2) ரூபா 300 000, ரூபா 60 000

(3) ரூபா 255 000, ரூபா 55 000 (4) ரூபா 300 000, ரூபா 100 000

(5) ரூபா 255 000, ரூபா 45 000 (..................)

(19) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும், சமர்ப்பித்தல் சட்டகத்திற்கமையக் கருத்திற் கொள்ளப்படும் நிதிக்கூற்றுக்களில் அடிப்படை எடுகோள் எது?

(1) அட்டுறு (2) தொடர்ந்தியங்குதல் (3) அலகுசார்

(4) இணைதல் (5) பாதுகாப்பு (..................)

(20) உற்பத்தி நிறுவனமொன்றின் 2017.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் உமக்குப் பின்வருமாறு 2017.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்காக கணிக்கப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 600 000 ஆகும் இவ் உற்பத்திக் கிரயம் கணிப்பிடுகையில் பின்வருவன கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 01. 04. 2016 இல் குறைவேலை ரூபா 40 000
- 31. 03.2017 இல் குறைவேலை ரூபா 65 000
- உற்பத்தி மேந்தலைக் கிரயம் ரூபா 25 000 நிர்வாகப் பகுதிக்கான ஊழியர் சம்பயத்தை உள்ளடக்கியுள்ளது.

மேற்தரப்பட்ட தகவல்களைக் கருத்தில் கொண்டதன் பின்னரான சரியான மொத்த உற்பத்திக் கிரயம் யாது?

(1) ரூபா 600 000 (2) ரூபா 730 000 (3) ரூபா 550 000

(4) ரூபா 535 000 (5) ரூபா 575 000 (..................)

(21) பின்பற்றப்படும் கணக்கீட்டு கொள்கை கைவிடப்பட்டு புதிய கணக்கீட்டு கொள்கை பின்பற்றப்படுமாயின் மீறப்படும் தகவல்களின் பண்புசார் குண இயல்பு

(1) பொருத்தமான தன்மை (2) உண்மையான பிரநிதித்துவம்

(3) ஒப்பிடக்கூடிய தன்மை (4) நடுநிலைத்தன்மை

(5) முழுமைத்தன்மை (..................)

The National e-learning Portal for The General Education

(22) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் - 16 இன்படி பெறுமானத்தேய்விடத்தக்க தொகை எனப்படுவது

(1) சொத்தின் கிரயத்திலிருந்து இறுதிப் பெறுமதியைக் கழிக்க வரும் தொகை

(2) சொத்தின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுத் தொகையை கழிக்க வரும் தொகை

(3) சொத்தின் கிரயத்தை பயன்தரு ஆயுட்காலத்தினால் வகுத்து வரும் தொகை

(4) சொத்தின் இறுதிப் பெறுமதி

(5) சொத்தின் கொள்விலையுடன் கொள்வனவு செலவுகளை கூட்ட வரும் தொகை (..................)

(23) கம்பனியொன்றினால் 31.03.2017 இல் சரக்கிருப்புக்களின் மூன்று உருப்படிகள் தொடர்பாகப் பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டது.

| உருப்படி | உற்பத்திக்கிரயம் | மதிப்பிடப்பட்ட விற்பனை விலை | மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவு |
|---|---|---|---|
| X | 1 000 000 | 1100 000 | 50 000 |
| Y | 1 500 000 | 1800 00 | 200 000 |
| Z | 800 000 | 850 00 | 150 000 |

உருப்படி அடிப்படையில் 31.03.2017 இல் சரக்கிருப்புக்களின் பெறுமதி யாது?

(1) ரூபா 3300 000 (1) ரூபா 3750 000 (1) ரூபா 3350 000

(1) ரூபா 3850 000 (1) ரூபா 3200 000 (..................)

(24) பின்வருவனவற்றில் எவ்விதம் இலாபத்தன்மையை மதிப்பிட மிகவும் பொருத்தமானது?

(1) இணைப்பு விகிதம் (2) நடைமுறை விகிதம்

(3) வட்டிக்காப்பு விகிதம் (4) உரிமை முதல் மீதான வருவாய் விகிதம்

(5) கடன் விகிதம் (..................)

(25) பகுதி சமப்படுத்தும் முறையில் பேரேடுகள் பராமரிக்கையில் பேரேடுகளில் கணக்குகள் பின்வரும் எவ் அடிப்படையில் தயார் செய்யப்படுகின்றன?

(1) இரண்டு வகை பேரேடுகளிலும் ஒற்றைப் பதிவு முறையைப் பின்பற்றல்

(2) இரண்டு வகை பேரேடுகளிலும் இரட்டை பதிவு முறையைப் பின்பற்றல்

(3) துணைப்பேரேட்டில் இரட்டை பதிவு முறையும் பொதுப்பேரேட்டில் ஒற்றை பதிவு முறையும் பின்பற்றல்

(4) பொதுப்பேரேட்டில் இரட்டை பதிவு முறையும் துணைப்பேரேட்டில் ஒற்றை பதிவு முறையும் பின்பற்றல்

(5) துணைப் பேரேட்டில் மட்டும் இரட்டைப் பதிவு முறை பின்பற்றல் (..................)

(26) வரையறுத்த அபி லிமிட்டெட்டின் 2017 மார்ச் 31 இல் முடிவற்ற ஆண்டுக்கான உரிமையாண்மை அசைவுக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தரவுகள் வருமாறு

பொது ஒதுக்கீட்டில் அதிகரிப்பு ரூபா 100 000

மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அதிகரிப்பு ரூபா 300 000

நிறுத்தி வைத்த வருவாயில் குறைவு ரூபா 150 000

கணக்காண்டில் கம்பனி ரூபா 500 000 இணை பங்குலாபமாக செலுத்தியிருப்பின் கணக்காண்டுக்கான இலாபம் யாது?

(1) ரூபா 750 000 (2) ரூபா 250 000 (3) ரூபா 450 000

(4) ரூபா 600 000 (5) ரூபா 150 000 (..................)

✦ கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 27, 28 ஆம் வினாக்களுக்கு விடை தருக. கூறப்பட்ட சாதாரண பங்குமுதல் ரூபா 10 000 000 யைக் கொண்டு 2015.04.01 இல் வியாபாரத்தை தொடங்கிய கம்பனியொன்று 2015 / 2016 இ 2016 / 2017 ஆகிய ஆண்டுகளுக்கான பின்வரும் தகவல்களை வழங்கியது.

| விபரம் | 2015 / 2016 (ரூபா) | 2016 / 2017 (ரூபா) |
|---|---|---|
| மொத்த வருமானம் | 15 000 000 | 22 000 000 |
| மொத்த செலவுகள் (வருமான வரி நீங்கலாக) | 12 000 000 | 25 000 000 |
| வருமானவரி | 750 000 | - |
| செலுத்திய பங்குலாபம் | 1 000 000 | - |
| மார்ச் 31 இல் மீள் மதிப்பீட்டு மிகை | - | 1 500 000 |
| மார்ச் இல் உள்ளவாறான மொத்தச் சொத்தக்கள் | 22 ,200 000 | 25 000 000 |

(27) 2016.03.31 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்புக்கள் எது?

(1) ரூபா 12 200 000 (2) ரூபா 10 000 000 (3) ரூபா 11 700 000

(4) ரூபா 22 200 000 (5) ரூபா 10 950 000 (..................)

(28) 2017.03.31 இல் உள்ளவாறான உரிமையாண்மை எது?

(1) ரூபா 18 000 000 (2) ரூபா 9 750 000 (3) ரூபா 16 500 000

(4) ரூபா 22 000 000 (5) ரூபா 15 000 000 (..................)

(29) 2017.03.31 இல் சசி வியாபாரத்தின் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 18 300 ஆக காணப்பட்ட நிலையில் கடன் கொடுத்தோர் பேரேடுகளின் தனிநபர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18 800 ஆக காணப்பட்டது. இவ்வேறுபாடு பிழையொன்றின் காரணமாக

எழுந்ததாகும். பின்வருவனவற்றுள் எவ்விடயம் இப்பிழையை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

(1) ரூபா 100 கடன்பட்டோர் பேரேடுகளின் மீதியொன்று கடன்கொடுத்தோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது

(2) பெற்ற கழிவு ரூபா 500 கடன் கொடுத்தோர் பேரேட்டில் சரியாகப் பதிவிடப்படும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவிடப்படாமலும் காணப்பட்டது.

(3) பெற்ற கழிவு ரூபா 500 கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவிடப்படும் கடன்கொடுத்தோர் பேரேடுகளில் பதிவிடப்படாமலும் காணப்பட்டது.

(4) கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1000 கடன் கொடுத்தோர் பட்டியலில் இருமுறை பதியப்பட்டிருந்தது

(5) கடன் கொடுத்தோர் கணக்கொன்றின் வரவு மீதித் தொகை ரூபா 500 கடன்கொடுத்தோர் பட்டியலில் ஒரு செலவு மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. (..................)

(30) ஒரு முதலீட்டு தீர்மானத்திலிருந்து எழும் பின்வரும் காசுப் பாய்ச்சல்களில் எது தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தேறிய காசுப்பாய்ச்சல்களை கணிப்பிடுவதுடன் தொடர்பற்றதாக இருக்கம்.

(1) வட்டிச் செலவு (2) செயற்பாட்டுச் செலவு (3) வருமானம்

(4) தொழிற்படு முதல் (5) ஆரம்ப முதலீடு (..................)

- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கான சுருக்கமான விடைகளைப் புள்ளிக் கோடுகளில் எழுதுக.

(31) பெது நோக்க நிதிக்கூற்றுக்களுக்கும் விசேட நோக்க நிதிக்கூற்றுக்களுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டினைத் தருக?

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(32) குறிப்பிட்டதொரு தினத்தில் காசேட்டின் படி வங்கி மீதி வரவு மீதியை காட்டுகின்ற போது வங்கிக் கூற்று மீதியும் வரவை காட்டக்கூடிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(33) விநோ வணிகம் தனது சில்லறைக் காசு கொடுப்பனவுகளை முற்பண முறையில் கட்டுப்பாடு செய்கின்றது. வசக்கட்ட நிதி ஒவ்வொரு மாத முதல் திகதியில் மீள் நிரப்பப்படுகின்றது. 2017.01.01 இல் கையில் உள்ள சில்லறைக் காசு மீதி ரூபா 850

| மாதம் | உபசரனைச் செலவு | காகிதாதி செலவு | அஞ்சல் செலவு | பேரேடு |
|---|---|---|---|---|
| ஜனவரி | 550 | 250 | 600 | 1000 |
| பெப்ரவரி | 350 | 300 | 400 | 1500 |

**2017. 03.01 இல் உள்ள சில்லறைக்காசு மீதி ரூபா 450**

(1) 2017 ஜனவரி 01 இல் வசக்கட்டு நிதி மீள் நிரப்பட்ட பெறுமதி யாது?

..........................................................................................................................

(2) 2017 பெப்ரவரி 01 இல் வசக்கட்டு நிதி மீள் நிரப்பல் தொடர்பான நாட்டுகுறிப்பு பதிவை தருக?..........................................................................................................................

..........................................................................................................................

(34) இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி நிதித்தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணதியங்கள் நான்கினை தருக?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(35) கம்பனியொன்று இலாப அளவுப் பகுப்பாய்விற்கேற்ப பின்வரும் வெற்றிடங்களிள் குறையும், அதிகரிக்கும் என்பதைக் குறிப்பிடுக.

சமப்பாட்டு புள்ளி பாதுகாப்பு எல்லை

(1) நிலையான கிரயம் குறைவடையும் போது..........................................................................

(2) விற்பனை விலை அதிகரிக்கும் போது..........................................................................

(36) ஏனைய காரணிகள் மாறாத நிலையில் முதலீட்டுச் செயற்றிட்ட மொன்றுடன் தொடர்பான பின்வரும் ஒவ்வொரு விடயமும் அதன் தேறிய நிகழ்காலப் பெறுமதியை அதிகரிக்குமா? குறைக்குமா என்பதைக் குறிப்பிடுக?

(1) ஆரம்ப முதலீட்டில் அதிகரிப்பு ..........................................................................

(2) சொத்துக்களின் எஞ்சிய பெறுமதியில் குறைவு ..........................................................................

(3) எதிர்பார்க்கப்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்களில் அதிகரிப்பு ..........................................................................

(4) கழிவீட்டு வீதத்தில் குறைவு ..........................................................................

(37) x,y,z ஆகியோர் முறையே 2 : 2: 1 என பகிர்ந்து கொண்டு நடாத்தி வரும் பங்குடைமையிலிருந்து 2016.12.31 இல் Z ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெறுதலுக்கான எவ்வித சீராக்கமும் செய்வதற்கு முன்னர் 2016.12.31 இல் Z மூலதனக் கணக்கின் செலவு மீதியும் நடைமுறைக் கணக்கு வரவு மீதியும் முறையே ரூபா 600 000, ரூபா 60 000 ஆகும்.

ஓய்வு பெறும் போது Z கையேற்ற மோட்டார் வாகனத்தின் கிரயம், பெறுமானத்தேய்வு ஏற்பாடு, கையேற்ற பெறுமதி என்பன முறையே ரூபா 800 000, ரூபா 320 000, ரூபா 500 000 ஆகும். வியாபாரத்தினால் Z க்கு செலுத்த வேண்டிய மிகுதித் தொகை யாது?

.....................................................................................................................................

(38) செயற்திட்டங்களை மதிப்பிடும் போது தேறிய நிகழ்காலப் பெறுமதி (N.P.V) முறையைப் பயன்படுத்துவதினால் ஏற்படும் இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................

(2) ..........................................................................

(39) மலர்விழி சனசமூக நிலையத்தின் புத்தகத்திலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| விபரம் | 31.03.2016 | 31.03.2017 |
|---|---|---|
| வருமதி சந்தா | 10 000 | 12 000 |
| முற்பண சந்தா | 2 000 | 1 000 |
| பெற்ற சந்தா | 100 000 | 98 000 |
| பெறவேண்டிய சந்தாவில் பதிவழிப்பு | - | 2 000 |

31.03.2017 இல் வருமானச் செலவு கணக்கிற்கு மாற்றப்படும் சந்தா யாது?

.....................................................................................................................................

- 40 , 41 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக. வரையறுக்கப்பட்ட யசி கம்பனியொன்றுடன் தொடர்புடைய 2017. 03.31 இல் முடிவுற்ற

| ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு | | ரூபா |
|---|---|---|
| வருமதியாளரிடம் பெற்ற காசு | | 250 000 |
| சென்மதியாளருக்கு செலுத்திய காசு | | 180 000 |
| செயற்பாட்டு செலவு செலுத்தியது | | 150 000 |
| முதலீட்டு நடவடிக்கையால் தேறிய காசு அதிகரிப்பு | | 40 000 |
| | 31.03.2016 | 31.03.2017 |
| வங்கி | 120 000 | (30 000) |
| மூன்று மாத நிறைசேரி உண்டியல் | | 50 000 |

(40) 2017.03.31 இல் முடிவுற்ற ஆண்டில் காசும் காசிற்கு சமனானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது தேறிய குறைவு யாது?

.......................................................................................................................................

(41) நிதியீட்டல் நடவடிக்கையால் ஏற்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

.......................................................................................................................................

(42) மதுரா வியாபாரமானது 31.03.2017 இல் காணப்பட்ட தனது முழு சரக்கிருப்புக்களையும் தீயினால் இழந்துள்ளது. பின்வரும் தகவல்கள் அத்தினத்தில் கிடைக்கப்பெற்றன.

| | |
|---|---|
| 01.04.2016 இல் சரக்கிருப்பு ரூபா | 350 000 |
| குறித்த வருடத்தில் செய்த கொள்வளவுகள் ரூபா | 1150 000 |
| குறித்த வருடத்திற்கான விற்பனைகள் ரூபா | 1800 000 |
| குறித்த வருடத்திற்கான உட்திரும்பல்கள் ரூபா | 100 000 |

நிறுவனத்தின் விற்பனையில் மொத்த லாபம் 60% ஆகும். தீயினால் அழிவடைந்த சரக்குகளின் பெறுமதி என்ன?.......................................................................................................

(43) வரையறுக்கப்பட்ட அனோ கம்பணி புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய உத்தேசிக்கிறது. இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின் பாவனையில் உள்ள இயந்திரத்தை ரூபா 100 000 இற்கு விற்பனை செய்ய முடியும். புதிய இயந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். இது தொடர்பான மற்றைய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| இயந்திரத்தின் கொள்விலை | 1 000 000 |
| பொருந்துதல் கிரயம் | 100 000 |
| 5 ஆம் வருட முடிவில் எஞ்சிய பெறுமதி | 200 000 |
| ஆரம்பத்தில் தேவைப்படும் தொழிற்படு மூலதனம் | 500 000 |
| வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் காசு உட்பாய்ச்சல் | 350 000 |

பின்வருவனவற்றை தயாரிக்குக.

(1) ஆரம்ப முதலீடு ..........................................................................................

(2) 5 ஆம் வருடத்திற்கான மொத்த காசு உட்பாய்ச்சல்கள்

.......................................................................................................................................

(44) வரையறுத்த பிரான்சிஸ் பொது கம்பனியின் பிரித்தெடுக்கப்பட்ட வருமானக் கூற்றில் A,B,C,D ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பின்வரும் தகவல்களைச் சமர்ப்பிப்பதில் பிரயோகிக்கக்கூடிய கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

வரையறுத்த பிரான்சிஸ் பொதுக்கம்பனி - A

31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான முற்று மடங்கிய வருமானக்காற்று

| | ரூபா | 000 | |
|---|---|---|---|
| | | | B |
| விற்பனை | 2 | 000 | C |
| விற்பனைக்கிரயம் | 1 | 100 | D |
| | | 900 | |

கணக்கீட்டு எண்ணக்கரு

A - ..........................................................................................................

B - ..........................................................................................................

C - ..........................................................................................................

D - ..........................................................................................................

(45) பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றின் உற்பத்திப் பொருள் "X" உடன் தொடர்பானவையாகும்.

பொருளாதார கட்டளைக் கணியம் (EOQ) 500 அலகுகள்

கட்டளைக்கிரயம் கட்டளை ஒன்றுக்கு ரூபா 500

இருப்பு வைத்தல் கிரயம் வருடம் அலகு ஒன்றிற்கு ரூபா 80

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(1) கட்டளைகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................................

(2) மொத்த இருப்பு வைத்தல் கிரயம் யாது?

..........................................................................................................................................

(46) பின்வரும் கூற்றுக்களில் எது சரி எது பிழை என்பதைப் பொருத்தமான நிரலில் அடையாளமிடுவதன் மூலம் காட்டுக.

| | கூற்று | சரி | பிழை |
|---|---|---|---|
| A - | நிகழத்தக்க பொறுப்புக்கள பொதுவாக நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படுகின்றன. | ............... | ............. |
| B - | ஐயக்கடன்களுக்காக செய்யப்பட்ட ஏற்படானது இணைத்தல் எண்ணக்கருவுடன் ஒத்துச் செல்கிறது | ............... | ............. |
| C - | உற்பத்தி மட்டம் அதிகரிக்கும் போது அலகுக்கான மாறும் கிரயம் அதிகரிக்கும் | ............... | ............. |
| D - | கிரய நிலையமென்பது உற்பத்தியினை மேற்கொள்ளும் இடத்தினை எப்போதும் குறிக்கும் | ............... | ............. |

The National e-Learning Portal for the General Education

(47) பின்வரும் தகவல்கள் கிங்ஸ் அச்சகத்தினால் 01.01.2017 இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்றுடன் தொடர்பானவை. இந் நிறுவனம் பெறுமதி சேர் வரிக்காக (VAT) பதியப்பட்டுள்ளது.

| | ரூபா |
|---|---|
| இயந்திரத்தின் பட்டியல் விலை | 800 000 |
| பெறுமதி சேர் வரி செலுத்தியது | 72 000 |
| இயந்திரத்தை பொருத்துவதற்கான கிரயம் | 10 000 |
| இயந்திர பராமரிப்புக் கிரயம் | 50 000 |

கொள்வனவின் போது 10% வியாபாரக்கழிவு பெறப்பட்டது. LKAS - 16 இன் படி ஆரம்ப இனங்காணலில் இயந்திரக்கிரயம் யாது?

.................................................................................................................................................

.................................................................................................................................................

(48) 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இரண்டு சட்டரீதியான நிறுவனங்கள் எவை?

(1) .........................................................................................................................................

(2) .........................................................................................................................................

The National e-learning Portal for the General Education

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 49 ஆம் 50 ஆம் வினாக்களுக்கு விடை தருக. ஒரு பொருள் X உடன் தொடர்புபட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இழிவுப் பாவனை | 300 அலகுகள் |
| உச்சப் பாவனை | 700 அலகுகள் |
| சிக்கன கட்டளைத் தொகை | 5000 அலகுகள் |
| மறுகட்டளை காலம் | 3 தொடக்கம் 5 வாரங்கள் |

(49) X இன் உச்ச சரக்கிருப்பு மட்டம் யாது?

.................................................................................................................................................

.................................................................................................................................................

(50) X இன் இழிவு சரக்கிருப்பு மட்டம் யாது?

.................................................................................................................................................

.................................................................................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, யூன் - 2017**

FWC

**Term Examination, June - 2017**

| தரம் :- 13 (2017) | கணக்கீடு – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்

(1) வரையறுத்த அள்வர் பொதுக் கம்பனியின் 31.03.2017 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு(ரூபா 000) | செலவு(ரூபா 000) |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்குமுதல் | | 500 000 |
| பொது ஒதுக்கல் | | 175 000 |
| 2016.04.01 இல் நிறுத்தி வைத்த இலாபம் | | 40 000 |
| காணி | 80 000 | |
| கட்டடம் - கிரயம் | 850 000 | |
| பொறியும் பொறித்தொகுதியும் - கிரயம் | 510 000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயம் | 160 000 | |
| சென்மதியாளர் | | 36 200 |
| வருமதியாளர் | 20 800 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு - 2016 04. 01 இல் | | |
| கட்டடம் | | 425 000 |
| பொறியும் பொறித்தொகுதியும் | | 320 000 |
| மோட்டார் வாகனங்கள் | | 48 000 |
| 15% தொகுதிக்கடன்கள் | | 120 000 |
| 2017.03.31 இல் தொக்குகள் | 128 000 | |
| மொத்த இலாபம் | | 990 250 |
| நிலத்தின் மீதான மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 50 000 |
| மூன்று மாத திறைசேரி உண்டியல்கள் | 500 000 | |
| 2016.04.01 வருமான வரி ஏற்பாடு | | 61 000 |
| செலுத்தப்பட்ட வருமானவரி - 2015 / 2016 | 55 000 | |
| 2016 / 2017 | 158 000 | |
| செலுத்தப்பட்ட இடைக்கால பங்குலாபம் | 60 000 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 68 000 |
| நிர்வாகச் செலவுகள் | 143 800 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 107 850 | |
| ஏனைய செலவுகள் | 53 200 | |
| ஐயக்கடன் ஏற்பாடு - 01.04.2016 | | 3 200 |
| ஊழியர் சேமலாபநிதி செலவு | 160 000 | |
| ஊழியர் நம்பிக்கை நிதி செலவு | 40 000 | |
| செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி | | 16 000 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | | 94 000 |
| வாடகை வருமானம் | | 240 000 |
| 10% நிலையான வைப்பு | 160 000 | |
| | 3186 650 | 3186 650 |

The National e-learning Portal for The General Education

**மேலதிக தகவல்கள் :-**

*31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் விடயங்கள் சீராக்கப்பட வேண்டும்.*

1) 31.03.2017 இல் சரக்கிருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 120 000 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
2) ரூபா 10 000 000 கொள்விலையான காணி அரசாங்கத்தினால் சுவீகரிப்பு செய்யப்பட்டது. ஏனைய காணியின் பெறுமானம் ரூபா 50 000 000 மிகையாக மறுமதிப்பீடு செய்யப்பட்டது. இவை தொடர்பாக மீள்மதிப்பீட்டு தொகையானது காணிக் கணக்கில் வரவிலும் காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கில் செலவிலும் பதிந்ததை தவிர வேறு பதிவுகள் எவையும் செய்யப்பட வில்லை.
3) 2015 / 2016 இறுதிக் காலாண்டின் வருமானவரி ரூபா 55 000 000 என இணங்கிக் கொள்ளப்பட்டு கொடுத்து தீர்க்கப்பட்டது. ஆனால் 2016/2017 ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதிக்காலாண்டுக்கு இன்னும் ரூபா 58 000 000 ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.
4) ஆண்டுப் பெறுமானத்தேய்வு பின்வருமாறு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். கட்டடம் கிரயத்தில் 10%, பொறியும் பொறித் தொகுதியும் குன்று மீதி முறையில் 10%, மோட்டார் வாகனங்களுக்கு கிரயத்தில் 15%
5) ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு வருமதியாளரில் 10% ஆகச் செம்மையாக்கல் செய்யப்படல் வேண்டும்
6) கம்பனியின் வேலைகொள்வோர், ஊழியர் என்போருக்கான ஊழியர்சேமலாப நிதி பங்களிப்பானது முறையே 12%, 8% ஆகும். மேலும் வேலைகொள்வோர். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்புச் செய்கின்றனர். இக்கம்பனியானது நடைமுறையாண்டிற்கான இறுதி மாதத்திற்கு ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றிற்கு எதுவித ஏற்பாடுகளும் செய்யவில்லை. ஊழியர்களது ஊழியர் சேமலாபநிதி பங்களிப்பு குறைத்துக் கொள்ளப்பட்டு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதிக் கணக்கில் செலவில் பதியப்பட்டுள்ளது.
7) மோட்டார் வாகனம் 01.04.2015 இல் நிதிக் குத்தகையின் கீழ் 4 வருட காலத்திற்கு விநியோக நோக்கத்திற்காக வாங்கப்பட்டது. இக் குத்தகைக்குச் செலுத்த வேண்டிய வருடாந்த தவணைக் கட்டணம் ரூபா 48 000 000 ஆகும். நடைமுறை வருடத்திற்கான குத்தகை தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இது வியாபாரச் சென்மதியாளர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. நடைமுறை வருடத்திற்கும் அடுத்த இரண்டு வருடங்களுக்குமான குத்தகை வட்டி கீழே தரப்பட்டுள்ளது.

| வருடம் | வட்டி (ரூபா 000) |
|---|---|
| 2016 / 2017 | 22 000 |
| 2017 / 2018 | 16 000 |
| 2018 / 2019 | 12 000 |

8) இயக்குனர் சபை இவ்வருடத்திற்கான இறுதிப் பங்குலாபமாக ரூபா 150 000 000 இனைப் பிரேரித்துள்ளது.
9) நிறுத்தி வைத்த வருவாய்களிலிருந்து ரூபா 25 000 000 இனை பொது ஒதுக்கத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
10) நிறுத்தி வைத்த வருவாய்களை மூலதனமாக்குவதன் மூலம் தற்போது உள்ள பங்குதாரர்களுக்கு 100 000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூபா 1000 வீதம் வழங்கப்பட்டன.
11) ஆண்டுக்கான வியாபாரப் புரள்வு ரூபா 2 500 000 000 வேண்டப்படுவது

வரையறுத்த அன்வர் பொதுக் கம்பனியின் பிரசுரித்தல் நோக்கத்திற்கான பின்வரும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்குக. (குறிப்புக்கள் உட்பட)

1) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான முற்று மடங்கிய வருமானக் கூற்று
2) 31.03.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று
3) 31.03.2017 இல் உள்ள படியான நிதிலைமைக் கூற்று (20 புள்ளிகள்)

(2) பங்குடைமையில் பசில், மகிந்த, சமல் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 3:2:1 எனும் விகிதப்படி பங்கீட்டுக் கொள்கின்றனர். பங்குடைமையின் 2016.03.31 ஆந் திகதி இருந்தபடியான நிதிநிலைமைக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

31.03.2016 இல் நிதிநிலைமைக் கூற்று

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **<u>நடைமுறையல்லா சொத்துக்கள்</u>** | | |
| காணி கட்டடம் | 350 000 | |
| (-) கட்டட பெறுமானத்தேய்வு ஏற்பாடு | 100 000 | 250 000 |
| மோட்டார் வாகனம் | 270 000 | |
| (-) மோட்டார் வாகன மெறுமானத் தேய்வு ஏற்பாடு | 170 000 | 100 000 |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | 350 000 |
| இருப்புக்கள் | 200 000 | |
| வருமதியாளர் | 180 000 | |
| வங்கி | 60 000 | 440 000 |
| | | 790 000 |
| **<u>மூலதனக் கணக்கு</u>** | | |
| பசில் | 250 000 | |
| மகிந்த | 250 000 | |
| சமல் | 125 000 | 625 000 |
| **<u>நடைமுறைக் கணக்கு</u>** | | |
| பசில் | 10 000 | |
| மகிந்த | 24 000 | |
| சமல் | 16 000 | 50 000 |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | |
| வியாபார சென்மதியாளர் | 100 000 | |
| சென்மதி மின்கட்டணம் | 10 000 | |
| சென்மதி தொலைபேசிக்கட்டணம் | 5 000 | 115 000 |
| | | 790 000 |

The National e-learning Portal for The General Education

**மேலதீக தகவல்கள் :-**

1) 2016.04.01 இல் பசில் பங்குடைமையிலிருந்து ஓய்வு பெற ஏனைய பங்காளர்கள் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு பங்குடமையை தொடர்ந்து நடாத்த தீர்மானித்தனர்.

2) 01.04.2016 இல் பங்குடைமையில் நன்மதிப்பானது ரூபா 60 000 என மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்பு தொடர்பான எல்லாச் சீராக்கங்களும் பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3) ஓய்வு பெறுகையில் பசிலுக்கு ரூபா 150 000 காசோலை கொடுக்கப்பட்டதோடு ரூபா 100 000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு மோட்டார் வாகனமும் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஒரு பகுதிக்கு எடுத்துக் கொள்ள பசில் அனுமதிக்கப்பட்டார். பசில் மிகுதியாக தனக்கு தரவேண்டிய தொகையை ஆண்டொன்றுக்கு 10% வட்டியைத் தருகின்ற நீண்டகாலக் கடனாக பங்குடமையில் வைத்திருக்கச் சம்மதித்தார்.

4) 2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுவனவுகள் கொடுப்பனவு பற்றிய கீழ்வருவனவற்றைக் வங்கி வெளிப்படுத்தியது.

| | ரூபா |
|---|---|
| வியாபார வருமதியாளரிடம் பெற்றது | 900 000 |
| வியாபார சென்மதியாளருக்கு கொடுப்பனவு | 480 000 |
| விநியோகச் செலவு கொடுப்பனவு | 111 000 |
| மின் கட்டணக் கொடுப்பனவு | 60 000 |
| தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவு | 20 000 |
| எடுப்பனவுகள் - மகிந்த | 25 000 |
| சமல் | 35 000 |
| பசிலுக்கு கொடுப்பனவு | 150 000 |

5) 2017.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறைப் பொறுப்புக்கள் (வங்கி, கடன் வட்டி, தவிர்ந்தது) என்பவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு

| | ரூபா |
|---|---|
| வியாபார வருமதியாளர் | (122 000) |
| வியாபார சென்மதியாளர் | (80 000) |
| சென்மதி மின்கட்டணம் | 2 000 |
| சென்மதி தொலைபேசிக்கட்டணம் | 3 000 |
| சரக்கிருப்பு | (50 000) |

6) காணிகட்டத்தில் காணியின் கிரயம் ரூபா 100.000 சேர்ந்துள்ளது. கட்டடங்களுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டும்.

**வேண்டப்படுவது :-**

மகிந்த, சமல் பங்குடைமையின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள்

1) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று (பங்காளருக்கான பகிர்வுகள் உட்பட)

2) 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் மூலதனக் கணக்கு, பங்காளர், நடைமுறைக்கணக்கு (10 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த அச்சுதன் கம்பனி கணினி, மடிக்கணினி என்னும் 2 உற்பத்திகளை தயாரிக்கின்றது. கம்பனியானது மூன்று உற்பத்தி திணைக்களங்களையும் ஒரு சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது. திணைக்களம் தொடர்பான தகவல்கள் வருமாறு

(1)

| விபரம் | வடிவமைத்தல் | பொருந்துதல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|---|
| நேரில் மூலப்பொருள் (ரூ 000) | 2 000 | 1 000 | 500 | 1 000 |
| நேரில் கூலி (ரூ000) | 1 000 | 600 | 400 | 500 |
| இயந்திர மணித்தியாலம் | 10 000 | 1 549 | 100 | - |
| ஊழிய மணித்தியாலம் | 16 065 | 1 000 | 461 | - |
| ஊழியர் எண்ணிக்கை | 60 | 30 | 40 | 20 |
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) | 3 000 | 750 | 500 | 750 |
| இயந்திரக் கிரயம் | 1000 000 | 1500 000 | 600 000 | 900 000 |

(2) களஞ்சிய பகுதியானது தனது 50% சேவைகளை வடிவமைத்தல் பகுதிக்கும் 30% சேவைகளை பொருத்துதல் பகுதிக்கும் 20% சேவைகளை முடிவுறுத்தல் பகுதிக்கும் வழங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(3) ஏனைய மேந்தலைகள்

| | (ரூபா 000) |
|---|---|
| வாடகை | 50 000 |
| மின்சாரம் | 35 000 |
| இயந்திர காப்புறுதி | 40 000 |
| சிற்றுண்டி செலவு | 7 500 |
| அலுவலர் போக்குவரத்து செலவு | 2 600 |

அலுவலர் போக்குவரத்து செலவு உற்பத்தி திணைக்கள ஊழியர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

(4) வடிவமைத்தல் பகுதி, பொருத்துதல் பகுதி, முடிவுறுத்தல் பகுதி என்பவற்றின் மேந்தலைகள் முறையே நேர் ஊழிய மணித்தியாலங்கள், இயந்திர மணித்தியாலங்கள், நேர் ஊழிய மணித்தியாலங்களின் அடிப்படையில் ஊறிஞ்சப்படுகின்றது.

(5) பின்வருவன கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு வகையான உற்பத்திப் பொருட்கள் தொடர்பானதாகும்.

| விபரம் | கணிணி | மடிக்கணிணி |
|---|---|---|
| அலகொன்றிற்கான முதன்மைக் கிரயம் | 23 000 | 37 000 |
| நேர் ஊழிய மணித்தியாலம் - வடிவமைத்தல் | 10 | 8 |
| இயந்திர மணித்தியாலம் - பொருந்துதல் | 5 | 3 |
| நேர் ஊழிய மணித்தியாலம் - முடிவுறுத்தல் | 3 | 5 |

**வேண்டப்படுவது:-**

1) பூரணப்படுத்தப்பட்ட மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை (களஞ்சிய பகுதியின் மேந்தலைக் கிரயத்தின் மீள்பகிர்வு உட்பட)

2) ஒவ்வொரு உற்பத்திப் பகுதிக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்

3) கணிணி, மடிக்கணிணி ஆகிய உற்பத்தில் பொருட்களின் அலகொன்றுக்கான உற்பத்திக்கிரயம். (10 புள்ளிகள்) (20 புள்ளிகள்)

(3) அ) 2017 மார்ச் 31 ஆம் திகதியன்று வணிகமொன்றின் வங்கிக் கூற்றின் வரவு மீதி ரூபா 22 500 ஆக காணப்பட்டது. ஆனால் அத்திகதியில் வணிகத்தின் வங்கிக்கூற்று மீதியுடன் வங்கிக் கணக்கு மீதியையும் ஒப்பிட்ட போது பின்வரும் தகவல்கள் வெளியாகின.

1) கடன் கொடு நருக்கு வழங்கப்பட்ட ரூபா 18 000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பதிவுகள் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

2) கடன் கொடுநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 20 000 காசோலையொன்று இதுவரை வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை

3) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 40 000 பெறுமதியான காசோலையொன்று வசூலிக்கப்படவில்லை

4) வங்கிக்கூற்றின் படி வங்கி மேலதிகப்பற்று வட்டிரூபா 2000, வங்கிச் சேவைக்கட்டணம் ரூபா 500 நிலையியற் கட்டளையின் அடிப்படையில் செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா 5000 என்பன நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்பட வில்லை.

**வேண்டப்படுவது:-**

1) 2017 மார்ச் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

2) 2017 மார்ச் 31 இல் சீராக்கப்படுவதற்கு முன்னரான வங்கிக் கணக்கு மீதி (5 புள்ளிகள்)

ஆ) சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சாரு கம்பனியின் 01 ஜனவரி 2017 இல் உள்ளவாறான சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| கட்டடங்கள் கிரயத்தில் | 1500 000 |
| கட்டடத்திற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு | 900 000 |
| சரக்கிருப்புக்கள் | 40 000 |
| வியாபார வருமதியாளர் | 300 000 |
| ஐயக்கடனிற்கான ஏற்பாடு | 30 000 |
| வங்கி | 135 000 |
| வியாபார சென்மதியாளர் | 250 000 |
| அட்டுறுச் செயற்பாட்டுச் செலவுகள் | 10 000 |

2017 ஜனவரி மாதத்தினுள் நிறுவனத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

1) ரூபா 90 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதற்காகக் காசோலையொன்று வழங்கப்பட்டது.
2) ஆரம்பத்தில் அட்டுறுவாகக் காணப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் உட்பட செலவுகளுக்காக ரூபா 40 000 காசோலை செலுத்தப்பட்டது.
3) ரூபா 500 000 பெறுமதியான சரக்குகள் கடனிற்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
4) கடன் விற்பனைகள் ரூபா 400 000 இச்சரக்குகளின் கிரயம் ரூபா 320 000 ஆகும்
5) சாருவின் நிலையான வைப்புப் பணம் ரூபா 300 000 இல் ரூபா 200 000 யை வணிகத்தின் நடைமுறைக் கணக்கில் வைப்பு செய்தார்
6) ரூபா 30 000 கழிவாக அனுமதித்த பின்னர் கடன்பட்டோரால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்த பணம் 370 000 ஆகும்.
7) உரிமையாளர் வியாபாரத்திலிருந்து தனது சொந்த தேவைக்காக ரூபா 30 000 கிரயமான பொருட்களை எடுத்துள்ளார்.
8) ரூபா 65 000 கிரயமுள்ள இருப்புக்கள் ரூபா 100 000க்கு விற்பனை செய்யப்பட்டது. இதற்காக ரூபா 50 000 காசோலை பெறப்பட்டதுடன் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. எஞ்சிய பெறுமானம் கடனாக கருதப்பட்டது.
9) மாத இறுதியில் காணப்படும் வருமதியாளர் மீதி மீது ஐயக்கடனிற்காக 10% ஏற்பாடு செய்யப்பட்டன.
10) கட்டடங்கள் வருடாந்தம் கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடப்பட்டன.

**வேண்டப்படுவது :-**

1) ஆரம்ப மீதிகளை வகைப்படுத்தி அதன் மொத்தங்களை ஐந்தொகைச் சமன்பாட்டில் பதிக.
2) மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியை ஐந்தொகைச் சமன்பாட்டில் பதிக. மேலும் பெறுமதி அதிகரிக்கிறதா (+) அல்லது குறைவடைகிறதா (-) என்பதையும் குறிப்பிடுக.
(விடையளிக்கும் போது பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டை பயன்படுத்துக)
சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாண்மை
3) தேறிய சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 2017 ஜனவரி மாதத்திற்கான தேறிய இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடவும்

(4) வரையறுக்கப்பட்ட பசில் தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட பசில் தனியார் கம்பனியின் 31.03.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முற்று மடங்கிய வருமானக்கூற்று

| விபரம் | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|
| விற்பனை | | 75 000 |
| விற்பனைக்கிரயம் | | (40 000) |
| மொத்த இலாபம் | | 35 000 |
| ஏனைய வருமானம் (குறிப்பு - 01) | | 10 000 |
| | | 45 000 |
| விநியோகச் செலவுகள் | 10 000 | |
| நிர்வாகச் செலவுகள் | 15 000 | |
| நிதிச் செலவுகள் (கடன் வட்டி) | 5 000 | (30 000) |
| வரிக்கு முன் இலாபம் | | 15 000 |
| வருமான வரி | | (5 250) |
| ஆண்டுக்கான இலாபம் | | 9750 |
| ஏனைய முற்று மடங்கிய வருமானம் | | |
| காணி மீள் மதிப்பீடு மிகை | | 1 000 |
| மொத்த முற்று மடங்கிய வருமானம் | | 10 750 |

வரையறுத்த பசில் தனியார் கம்பனியின் (ரூபா 000)

31.03.2017 இலட முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மூலதனக் கூற்று

| விபரம் | கூறப்பட்ட சாதாரண பங்கு | மீள்மதிப்பீட்டு மிகை | பொது ஒதுக்கம் | நிறுத்தி வைத்த இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01.04.2016 இல் மீதி | 100 000 | 5 000 | 3 000 | 8 000 | 116 000 |
| பொது ஒதுக்கம் | | | 750 | 750 | 0 |
| மூலதன மாக்கல் | 2 000 | | (2 000) | | 0 |
| மொத்த முற்று மடங்கிய வருமானம் | | 1 000 | | 9750 | 10 750 |
| பங்கு வழங்கல் | 10 000 | | | | 10 000 |
| 31.03.2017 இல் மீதி | 112 000 | 6000 | 1 750 | 17 000 | 136 750 |

வரையறுத்த பசில் தனியார் கம்பனியின் மார்ச் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றுக்கள் (ரூபா 000)

| விபரம் | 2017 | 2016 |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு) | 200 000 | 213 000 |
| முதலீடுகள் | 57 000 | 40 000 |
| இருப்புக்கள் | 7 000 | 40 000 |
| வியாபார வருமதியாளர் | 25 000 | 50 000 |
| வருமதி முதலீட்டு வருமானம் | 5 000 | 7 000 |
| காசு | 63 000 | 78 000 |
| | 357 000 | 400 000 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 112 000 | 100 000 |
| மீள் மதிப்பு ஒதுக்கு | 6 000 | 5 000 |

| | | |
|---|---|---|
| பொது ஒதுக்கம் | 1750 | 3 000 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 17 000 | 8 000 |
| வங்கிக் கடன் | 200 000 | 259 000 |
| வியாபார சென்மதியாளர் | 13 000 | 18 000 |
| அட்டுறு செலவுகள் - வருமானவரி | 4350 | 3 000 |
| கடன் வட்டி | 3000 | 4 000 |
| | 357 000 | 400 000 |

குறிப்புகள் :

குறிப்பு *01*

| | |
|---|---|
| ஏனைய வருமானம் | ரூபா 000 |
| மோட்டார் விற்பனை இலாபம் | 2 000 |
| முதலீட்டு வருமானம் | 8 000 |
| | 10 000 |

குறிப்பு - *02*

ஆதனம், பொறி, உபகரண அசைவுக் கூற்று *(ரூ 000)*

| விபரம் | காணி | கட்டடம் | மோட்டார் | மொத்தம் |
|---|---|---|---|---|
| *01.04.2016* இல் மீதி | 100 000 | 60 000 | 90 000 | 250 000 |
| சேர்ப்பனவு | | 10 000 | | 10 000 |
| மீள் மதிப்பு | 1 000 | | | 1 000 |
| அகற்றல் | | | (20 000) | (20 000) |
| *31.03.2017* இல் மீதி | 101 000 | 70 000 | 70 000 | 241 000 |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | | | |
| *01.04.2016* இல் மீதி | - | 12 000 | 25 000 | 37 000 |
| ஆண்டுக்கான தேய்வு | - | 3 000 | 9 000 | 12 000 |
| அகற்றல் | - | - | (8 000) | (8 000) |
| *31.03.2017* இல் மீதி | - | 15 000 | 26 000 | 41 000 |
| *31.03.2017* இல் கொண்டு செல்லும் மீதி | 101 000 | 55 000 | 44 000 | 200 000 |

**வேண்டப்படுவது :-**

(1) *31.03.2017* இல் முடிவடைந்த வருடத்திற்காக பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) நடைமுறை விகிதம் 2) கடன் விகிதம் 3) வட்டிக்காப்பு விகிதம்

4) உரிமையாண்மை திரும்பல் விகிதம்

5) மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் விகிதம்

(2) LKAS - 7 இன் படியான (காசுப்பாய்ச்சல் கூற்று) வரையறுத்த பசில் தனியார் கம்பனியின் *31.03.2017* இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று(10 புள்ளிகள்)

(5) அ) 2016.12.31 இல்முடிவடைந்த வருடத்திற்கான வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கு பின்வருமாறு

**கொள்ளல் கொடுத்தல் கணக்கு**

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 2016.01.01 இல் மீதி | 15 000 | கட்டிட வாடகை | 24 000 |
| சந்தா - 2016 | 96 000 | மின்சாரக் கட்டணம் | 15 000 |
| - 2015 | 9 000 | தொலைபேசிக் கட்டணம் | 8 000 |
| ஆயூட்சந்தா | 20 000 | அலுவலகச் செலவு | 25 000 |
| இசை நிகழ்சி நுழைவுச்சீட்டு விற்பனை | 30 000 | இசைநிகழ்சி பாடகர் கொடுப்பனவு | 20 000 |
| இசை நிகழ்ச்சி அனுசரணை யாளரிடமிருந்து பெற்றது | 20 000 | இசை நிகழ்ச்சி மேடை அமைதல் | 5 000 |
| | | இசை நிகழ்ச்சி நுழைவுச் சீட்டு அச்சடித்தல் | 6 000 |
| | | 31.12.2016 இல் மீதி | 87 000 |
| | 190 000 | | 190 000 |

**மேலதிக தகவல்கள் :-**

(1) வளர்மதி விளையாட்டுக் கழகத்தில் 100 பேர் அங்கத்துவம் பெற்றிருந்தனர். வருடாந்த அங்கத்துவ கட்டணம் ரூபா 1000 ஆகும்.

(2) கழகத்தின் சந்தா கணக்கானது காசு அடிப்படையில் தயாரிக்கப்படுவதாகும்

(3) அங்கத்தவர்கள் 10 வருடங்களுக்கான காசை ஒரே முறையில் செலுத்துவதன் மூலம் ஆயூட்சந்தா உறுப்பினர்களாக முடியும்.

(4) ஆயூள் சந்தா 5 சமனான வருடங்களுக்கு வருமானமாக காட்டப்படுதல் வேண்டும்

(5) 2016.07.01 இல் வியாபார நிறுவனமொன்றினால் ரூபா 600 000 பெறுமதியான முச்சக்கரவண்டியொன்று நன்கொடையாக வழங்கப்பட்டது. முச்சக்கர வண்டிக்கு நேர்கோட்டு முறையில் 20% பெறுமானத்தேய்விடுவது என இக்கழம் தீர்மானித்து

(6) விளையாட்டு உபகரணங்களுக்கு ஒடுங்குபாக முறையில் 10% நேய்மானம் செய்யப்படும்

(7) வருட ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ளவாறான சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமாறு.

| **விபரம்** | ***2016.01.01*** | ***2016.12.31*** |
|---|---|---|
| விளையாட்டு உபகரணம் | 52 000 | ? |
| அட்டுறு தொலைபேசி கட்டணம் | 800 | 1200 |
| அட்டுறு மின்கட்டணம் | 1 200 | 1500 |

**வேண்டப்படுவது :-**

1) இசை நிகழ்ச்சிக் கணக்கு

2) 31.12.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு

3) 31.12.2016 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று (08 புள்ளிகள்)

ஆ) வணிகமொன்றின் மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1) 2013.04.01 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதி ரூபா 2000 000 ஆக இருந்ததுடன் 10 வருடங்களின் பின்னர் அதன் இழிவுப்பெறுமதி ரூபா 200 000 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்தது.

2) 2015.10.01 இல் மேற்குறிப்பிட்ட மோட்டார் வாகனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ரூபா 500 000 பெறுமதியான புதிய இயந்திரமொன்று அதற்கு பொருத்தப்பட்டது. அப்பொருத்துதல் காரணமாக மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் அத்திகதியிலிருந்து 10 வருடங்களாகும் எனவும் இழிவுப் பெறுமதி ரூபா 250 000 எனவும் மதிப்பிடப்பட்டது.

3) 2017.01.01 இல் மேற்குறிப்பிட்ட மோட்டார் வாகனம் ரூபா 1500 000 பெறுமதியுடைய அதே போன்ற மோட்டார் வாகன மொன்றுடன் மாற்றிக் கொள்ளப்பட்டது. இதற்காக பழைய மோட்டார் வாகனத்துடன் ரூபா 200 000 காசோலையும் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

4) புதிய மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்களாகவும் இழிவுப் பெறுமதி அதற்கு இல்லையெனவும் மதிப்பிடப்பட்டது.

**வேண்டப்படுவது:-**

1) மோட்டார் பரிமாற்றம் தொடர்பிலான நாட்குறிப்புப் பதிவுகள்

2) மோட்டார் பரிமாற்றம் காரணமாக 2017.03.31 இல் முடிவடையும் வருடத்தில் இலாபத்தில் ஏற்படும் தாக்கத்தினைக் காட்டுக. (07 புள்ளிகள்)

(6) அ) வெதுப்பக உரிமையாளரான ரவீஸ் மேலதிக வருமானத்தை உழைக்கக்கூடிய புதிய வெதுப்பக இயந்திரத்தை வாங்க எண்ணுகிறார். இவர் தனது தேவைகளை திருப்திபடுத்தக்கூடிய இரு வகை இயந்திரங்கள் P,Q களை இனங்கண்டுள்ளார். மேற்படி இரண்டு இயந்திரங்கள் தொடர்பான காசுப்பாய்ச்சல்களும் ஏனைய விபரங்களும் கீழே தரப்படுகிறது.

| | இயந்திரம் P | இயந்திரம் Q |
|---|---|---|
| ஆரம்ப முதலீடு | 200 000 | 230 000 |
| தேறிய காசு உட்பாய்ச்சல் வருடம் 1 | 80 000 | 100 000 |
| வருடம் 2 | 70 000 | 70 000 |
| வருடம் 3 | 60 000 | 60 000 |
| வருடம் 4 | 60 000 | 50 000 |
| வருடம் 5 | 50 000 | 51 000 |
| 5 வருடங்களின் பின் எஞ்சிய பெறுமதி | 10 000 | 30 000 |
| எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் | 5 வருடம் | 5 வருடம் |

5 வருடங்களிற்கான வருடாந்தம் 10% இல் கழிவீட்டுக் காரணி பின்வருமாறு

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக்காரணி | 0.91 | 0.83 | 0.78 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது :-**

1) ஒவ்வொரு இயந்திரங்களுக்குமான திரும்பபெறும் காலம்

2) ஒவ்வொரு இயந்திரங்களுக்குமான ஆரம்ப முதலீட்டின் அடிப்படையில் கணக்கீட்டு திரும்பல் வீதம்

3) ஒவ்வொரு இயந்திரங்களுக்குமான தேறிய நிகழ்காலப்பெறுமதி

4) தேறிய நிகழ்காலப் பெறுமதியின் அடிப்படையில் எவ் இயந்திரத்தை கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை சிபார்சு செய்க. (09 புள்ளிகள்)

ஆ) 2016. 12.31 இல் கபியின் கடன்பட்டோர்கள் பேரேட்டிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பட்டியல் மீதி ரூபா 105 800 ஆக காணப்பட்டது.

ஆனால் அத்திகதியில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது அதே தொகையை கொண்டிருக்கவில்லை பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1) சுதனின் செலவு மீதியான ரூபா 2800 ஆனது கடன்பட்டோர் பட்டியலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.
2) சில்வாவின் ரூபா 5800 கடன் அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்கப்பட்டது. ஆனால் இது கடன்பட்டோர் பேரேட்டில் மாத்திரமே பதியப்பட்டுள்ளது.
3) அன்வருக்கு விற்பனைகள் ரூபா 50 000 விற்பனை நாளேட்டில் சரியாகக் பதியப்பட்ட போதும் கடன்பட்டோர் பேரேட்டில் உள்ள அன்வரின் கணக்கில் பதியப்படவில்லை.
4) சீலனின் ரூபா 15 000 இற்கான காசோலை மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.
5) கவிதாவிடம்இருந்து காசாக பெறப்பட்ட ரூபா 22 000 பிழையாக இவரின் பெயரைக் குறிக்கும் கணக்கில் வரவில் பதிவிடப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது :-**

1) 2016.12.31 இல் திருத்த முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை வெளிக்கொணரும் இணக்கக்கூற்று
2) வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்
3) அவசியமான திருத்தங்களுடன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (06 புள்ளிகள்)

(7) அ) உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றின் X எனும் மூலப்பொருளின் 50 அலகுகள் 2017.01.01 இல் தொழிற்சாலையில் எஞ்சியிருந்தன. அந்நிறுவனத்தின் களஞ்சிய காப்பாளர் பின்வரும் தகவல்களை முனவைக்கின்றார்.

| திகதி | விபரம் | அலகுகள் | அலகொன்றின் விலை (ரூபா) |
|---|---|---|---|
| 2017.01.01 | களஞ்சியசாலையில் உள்ள இருப்புகள் | 300 | 30 |
| 2017.01.02 | தொழிற்சாலைக்கு விநியோகித்தல் | 100 | ? |
| 2017.01.04 | தொழிற்சாலைக்கு விநியோகித்தல் | 30 | ? |
| 2017.01.05 | கொள்வனவு | 1000 | 40 |
| 2017.01.10 | தொழிற்சாலைக்கு விநியோகித்தல் | 500 | ? |
| 2017.01.15 | தொழிற்சாலையினால் திருப்பி அனுப்பப்பட்டது | 20 | 30 |
| 2017.01.25 | தொழிற்சாலைக்கு விநியோகித்தல் | 490 | ? |
| 2017.01.27 | தொழிற்சாலைக்கு விநியோகித்தல் | 100 | ? |
| 2017.01.28 | கொள்வனவு | 1000 | 40 |

பின்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

1) 2017.01.31 இல் தொழிற்சாலையில் எஞ்சியுள்ள இருப்புக்கள் 50 அலகுகள் ஆகும்

2) நிறுவனம் இருப்புக்களை பெறுமதியிடுவதற்கு முதல் வந்தது முதல் வெளியே விலையிடல் முறையினைப் பின்பற்றுகின்றது.

3) சரக்கிருப்புக்களைப் பெறுவதற்கான முதன்மைக் காலமானது கட்டளையிடும் தினத்திலிருந்து சரியாக 3 நாட்கள் ஆகும்.

**வேண்டப்படுவது:-**

1) மறு கட்டளை தொகை யாது?

2) மறுகட்டளை மட்டம் யாது?

3) தொழிற்சாலையின் நாளொன்றின் சராசரி நுகர்வு யாது?

4) களஞ்சிய பேரேட்டின் படி 2017 ஜனவரி 31 இலுள்ள மூலப்பொருள் இருப்பின் பெறுமதி யாது?

5) மூலப்பொருள் X இன் சிக்கன கட்டளைத் தொகை 1200 அலகுகள் எனக் கருதி கணிக்கப்பட்ட அதன் சரக்கு கிரயமானது தற்போதைய சரக்கு கிரயத்துடன் ஒப்பிடுகையில் அதிகமா அல்லது குறைவா அல்லது மாற்றமற்றதா எனக் குறிப்பிடுக.(7.5 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த அருமை ஒரு உற்பத்திக்கம்பனி பின்வரும் விற்பனை மற்றும் இலாபம் தொடர்பான தகவல்கள் அதன் உற்பத்திப் பொருளான P யுடன் தொடர்புடையதாகும்.

| விற்பனைகள் (அலகுகள்) | இலாபம் (ரூபா) |
|---|---|
| 30 000 | 40 000 |
| 35 000 | 60 000 |

மூலப்பொருள் P யின் அலகொன்றுக்கான விற்பனை விலை ரூபா10 மேற்தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) மொத்த நிலையான செலவு

2) அலகொன்றுக்கான மாறும் கிரயம்

3) பங்களிப்பு விற்பனை விகிதம்

4) சமப்பாட்டுப் புள்ளியை அலகுகளில் கணிக்க

5) இலாபம் ரூபா 100 000 உழைப்பதற்கு தேவைப்பட்ட விற்பனை அலகுகள்?

(7.5 புள்ளிகள்)